# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI

Daily Morning

Vol : 01 | Issue : 61 | 4 Pages | 01.10.2023 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர் : 01 | இதழ் : 61 | 4 பக்கங்கள் | 01.10.2023 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்



## “காங்கிரஸ் கட்சியைப் போல வேறு யாரும் ஏழைகளுக்கு அநீதி இழைத்தது இல்லை” பிரதமர் மோடி

பிலாஸ்பூர் (சத்தீஸ்கர்), அக்.1

“காங்கிரஸ் கட்சியைப் போல வேறு யாரும் ஏழைகளுக்கு அநீதி இழைத்தது இல்லை” என்று பிரதமர் நரேந்திர மோடி குற்றம்சாட்டியுள்ளார்.

சட்டப்பேரவைத் தேர்தல் விரைவில் நடைபெற உள்ள மாநிலங்களில் ஒன்றான சத்தீஸ்கரின் பிலாஸ்பூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பேசியது: "தற்போதுள்ள காங்கிரஸ் அரசை மாற்ற வேண்டும் என சத்தீஸ்கர் முடிவு செய்துவிட்டது. அதற்கான உற்சாகம் உங்களிடம் (வாக்காளர்களிடம்) தெரிகிறது. காங்கிரஸ் கட்சியின் அராஜகத்தை இனியும் பொறுத்துக்கொள்ள முடியாது என்ற முடிவுக்கு சத்தீஸ்கர் மக்கள் வந்துவிட்டார்கள்.

உங்கள் கனவுகள் நனவாக நான் உத்தரவாதம் அளிக்கிறேன். சத்தீஸ்கரில் பாஜக ஆட்சிக்கு வந்தால் மட்டுமே உங்களின் கனவுகள் நனவாகும். சத்தஸ்கரை முன்னேற்ற டெல்லியில் இருந்து எவ்வளவு பணம் கொடுத்தாலும் அதை மாநிலத்தில் ஆட்சியில் உள்ள காங்கிரஸ் அரசு தோல்வி அடையச் செய்துவிடுகிறது. கடந்த 5 ஆண்டுகளில் பல ஆயிரக்கணக்கான கோடி



ரூபாய்சத்தீஸ்கருக்குக்கொடுக்கப்பட்டுள்ளது. சாலைகள் அமைத்தல், ரயில் போக்குவரத்து, மின்சாரம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்காக மத்தியஅரசுநிதிஅளித்திருக்கிறது. மாநிலத்திற்கு நிதி பற்றாக்குறையை நாங்கள் வைக்கவில்லை.

சத்தீஸ்கருக்கு மத்திய அரசு எந்த அநீதியையும் அளிக்கவில்லை என்று மாநில துணை முதல்வர் சொல்லி இருக்கிறார். அதுவும் பொது மக்கள் முன்னிலையில். மாநிலத்தின் உள்கட்டமைப்பு வசதிகளுக்காக ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை மத்திய அரசு வழங்கி உள்ளது. ஆனால், மாநில அரசு திட்டங்களை ஒன்று நிறுத்துகிறது அல்லது ஒத்திபோடுகிறது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ரயில்வே துறைக்காக மத்திய அரசு ரூ.300 கோடி மட்டுமே ஒதுக்கியது. ஆனால், பாஜக அரசு ரூ.6,000 கோடி ஒதுக்கி உள்ளது. இதுதான் மோடி மாடல். சத்தீஸ்கர் மீதான அன்புதான் இதற்குக் காரணம்.

மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்குவதற்கான மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளார். எனவே அது தற்போது சட்டமாகிவிட்டது. இந்த மசோதா 30 ஆண்டுகளாக நிலுவையில் இருந்தது. ஆனால், நாங்கள் அதனை நிறைவேற்றிவிட்டோம். இதற்காக காங்கிரஸ் கட்சியும் அதன் கூட்டணி கட்சிகளும் எங்கள் மீது கோபமாக இருக்கிறார்கள்.

பெண்களின் ஆசிர்வாதம் அனைத்தும் மோடிக்கே சென்றுவிடும் என அவர்கள் நினைக்கிறார்கள். உங்கள் ஒற்றுமையையும் விழிப்புணர்வையும் நினைத்து அவர்கள் அஞ்சுகிறார்கள். எனவே, தற்போது சாதியின் பெயரால் பெண்களை பிரிக்க அவர்கள் விரும்புகிறார்கள். மத்திய அரசின் முடிவு அடுத்த ஆயிரம் ஆண்டுகளுக்கு தாக்கத்தை

ஏற்படுத்த வல்லது என்பதை நான் சத்தீஸ்கர் மகளிருக்கு தெரிவிக்க விரும்புகிறேன். அவர்களின் பொய் வலையில் விழாதீர்கள்.


காங்கிரஸ் கட்சியைப் போல ஏழைகளுக்கு அநீதி இழைத்தவர்கள் வேறு யாரும் கிடையாது. கரோனா காலத்தின்போது அனைவருக்கும் இலவச உணவுப் பொருட்களை வழங்க நான் முடிவெடுத்தேன். ஆனால்,சத்தீஸ்கரில் உள்ள காங்கிரஸ் அரசு அதிலும் ஊழல் செய்தது" என்று பிரதமர் மோடி உரையாற்றினார்.

## ”பேச்சு சுதந்திரத்தை நாங்கள் யாரிடமும் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை” கனடா பிரச்சினையில் அமைச்சர் ஜெய்சங்கர் கருத்து

வாஷிங்டன்,அக்.1

இந்தியா ஒரு ஜனநாயக நாடு. அதனால் எங்களுக்கு பேச்சு சுதந்திரம் பற்றி யாரும் கற்றுத்தர வேண்டியதில்லை என வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். அமெரிக்கப் பயணம் மேற்கொண்டுள்ள அமைச்சர் ஜெய்சங்கர் அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் ஆண்டனி பிளின்கன், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் ஆகியோரை சந்தித்துப் பேசினார்.

வாஷிங்டனில் செய்தியாளர்கள் சந்திப்பில் அமைச்சர் ஜெய்சங்கர் கூறியதாவது: இந்தியா ஒரு ஜனநாயக நாடு. எங்களுக்கு பேச்சு சுதந்திரம் பற்றி யாரும் கற்றுக் கொடுக்கத் தேவையில்லை. பேச்சு சுதந்திரம் என்ற பெயரில் வன்முறையைத் தூண்டக்கூடாது. அது எங்களைப் பொறுத்தவரை உரிமை துஷ்பிரயோகமாகும். கனடா தீவிரவாதம், பயங்கரவாதம், வன்முறையை ஆதரிப்பதுதான் உண்மையான பிரச்சினை. கனடாவில் உள்ள இந்தியத் தூதரகக் கட்டிடத்தில் காலிஸ்தான் ஆதரவுப் போஸ்டர்கள் தொங்கவிடப்பட்டன.




இதேபோன்ற நிலைமையை நீங்கள் (அமெரிக்கர்கள்) எதிர்கொள்ள நேர்ந்தால் என்ன செய்வீர்கள் என்று என் நிலைமையில் இருந்து யோசித்துப் பாருங்களேன். கனடாவில் மட்டுமல்ல இங்கே சான் ஃப்ரான்சிஸ் கோவிலும் இந்திய தூதரகம் தாக்குதலுக்கு உள்ளாகினர். இந்தியாவும், கனடாவும் இணைந்து பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்பது பற்றி கலந்தாலோசிக்க வேண்டும். கனடா பிரச்சினை பற்றி நான் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆண்டனி பிளின்கன், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் ஆகியோருடன் பேசியிருக்கிறேன். நாங்கள் கனடாவின் குற்றச்சாட்டை கண்டுகொள்ளாமல் இல்லை. எதையும் பார்க்கமாட்டோம் என்று கதவுகளை மூடிக் கொண்டும் இல்லை. எதிர்தரப்பில் என்று ஆதாரமாகக் காட்ட தெளிவாக ஏதேனும் இருந்தால் அதை நாங்கள் பார்க்கத் தயாராகவே இருக்கிறோம்.

அதேபோல் இந்தியா சார்பில் சில தனிநபர்களை நாடு கடத்தும்படி கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. அவற்றை கனடா கண்டுகொள்ளவே இல்லை. அந்த நபர்கள், அமைப்புகள் இந்தியாவுக்கு எதிரான வன்முறையைத் தூண்டும், சட்டவிரோத செயல்களில் ஈடுப்பட்டன என்பது தெரிந்துமே கனடா ஒத்துழைக்கவில்லை என்றார். கனடாவில் இந்திய தூதரக அலுவலகம் மீது புகை குண்டுகள் வீசப்பட்டுள்ளன. போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன. எங்கள் தூதரக அதிகாரிகள் மிரட்டப்படுவதும், அவமரியாதை செய்யப்படுவதும் இன்றும் தொடர்கிறது. இதேபோன்ற சம்பவங்கள் வேறு நாடுகளுக்கு நடந்திருந்தால் என்னவாகியிருக்கும். அதனால்தான் இந்தச் சம்பவத்தை சாதாரணமாகக் கடந்து செல்லக் கூடாது என்று நாங்கள் கூறுகிறோம். ஊடகங்கள் இவற்றையெல்லாம் கருத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

முன்னதாகப் பேசிய அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆண்டனி பிளின்கன், கனடா இந்தியா தங்கள் பிரச்சினையை தாங்களே பேசித் தீர்க்கும் என்று நம்புவதாகக் கூறினார்.

கனடா இந்தியா மோதல் பின்னணி: கனடாவைச் சேர்ந்த சீக்கியத் தலைவரான ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கடந்த ஜூன் 18ம் தேதி கனடாவில் உள்ள சீக்கிய குருத்வாராவுக்கு அருகே சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது கொலையில் இந்திய அரசுக்கு தொடர்பு இருப்பதாக கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் ஜஸ்டின் ட்ரூடோ குற்றச்சாட்டை முன்வைத்தார். மேலும், கனடாவில் உள்ள இந்திய தூதரை வெளியேறஉத்தரவிட்டார். இதற்கு எதிர்வினையாக இந்திய அரசு, இந்தியாவில் உள்ள கனட அதிகாரியை வெளியேற உத்தரவிட்டது. இதனாலேயே கனடாவுக்கு இந்தியாவுக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

# விலை மதிப்பற்ற உயிர்களை தொடர்ந்து காத்திட, மக்கள் அனைவரும் மனமுவந்து ரத்த தானம் செய்திட முன்வர வேண்டும்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை,அக்.1

விலை மதிப்பற்ற உயிர்களை தொடர்ந்துகாத்திட, மக்கள்அனைவரும் மனமுவந்து ரத்த தானம் செய்திட முன்வர வேண்டும் என அக்டோபர் 1 தேசிய தன்னார்வ ரத்த தான தினத்தை ஒட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார். கடந்த ஆண்டு அரசு ரத்த மையங்கள் மூலம் 95% ரத்தம் சேகரிக்கப்பட்டு, தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்வதாக முதல்வர் தெரிவித்தார். இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில்:

இரத்த தானம் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் திங்கள் முதல் நாள் தேசிய தன்னார்வ இரத்த தான தினமாக கொண்டாடப்படுகிறது.

இந்த ஆண்டிற்கான தேசிய தன்னார்வ இரத்த தான தினத்தின் கருப்பொருள் “தொடர்ந்து இரத்தம், பிளாஸ்மா தானம் செய்வோம், வாழ்வை பகிர்ந்து கொள்வோம்”என்பதாகும்.அறிவியலில் ஏராளமான கண்டு பிடிப்புகள் நிகழ்ந்திருந்தாலும் இரத்தம் என்ற உயிர் திரவத்தை இன்னும் செயற்கையாகஉருவாக்கஇயலவில்லை. ஒவ்வொருவரின்உடலிலும்உள்ள சுமார் 5 லிட்டர் இரத்தத்தில், இரத்ததானத்தின்போது 350 மி.லி இரத்தம் மட்டுமே எடுக்கப்படுகிறது.

இரத்த தானம் செய்ய 20 நிமிடங்களே ஆகும். இரத்த தானம் செய்தவுடன் வழக்கம் போல் அன்றாட வேலைகளை மேற்க்கொள்ளலாம். 18 வயது முதல் 65 வயது வரை உள்ள ஆரோக்கியமான அனைவரும் 3 மாதத்திற்கு ஒரு முறை இரத்த தானம் செய்யலாம். உரியகால இடைவெளியில் இரத்த தானம் செய்வதால் உடலில் புதிய செல்கள் உருவாகி அவர்களின் உடல் நலன் காக்கப்படுகிறது. அரசு இரத்த மையங்கள் மற்றும் இரத்த தான முகாம்களில் தன்னார்வமாக இரத்த தானம் செய்யலாம். இரத்த மையங்களின் செயல்பாடுகளை கண்காணிப்பதற்கான eRakt Kosh வலைதளத்தில், இரத்ததான முகாம் மற்றும் இரத்த கொடையாளர்களை பதிவு செய்து கொள்ளலாம். பொதுமக்கள் இத்தளத்தை பயன்படுத்தி தங்களுக்கு தேவைப்படும் நேரங்களில் எளிதில் இரத்தம் பெற்றுக் கொள்ளலாம்.



தானமாக பெறப்படும் ஒரு அலகு இரத்தம் 4 உயிர்களை காப்பாற்றும். இவ்வாறு பிறர் உயிர் காக்க உதவிடும் இரத்தக் கொடையாளர்கள் மற்றும் இரத்த தான முகாம் அமைப்பாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களும், பதக்கங்களும் வழங்கி தமிழ்நாடு அரசு சிறப்பித்து வருகிறது.

கடந்த ஆண்டு அரசு இரத்த மையங்கள் மூலம் 95 விழுக்காடு இரத்தம் சேகரிக்கப்பட்டு, தன்னார்வ இரத்த தானத்தில், இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்வது குறித்து பெருமையடைகிறேன். நடப்பு ஆண்டில், தன்னார்வ இரத்ததானத்தில் தமிழ்நாடு 100 விழுக்காடு இலக்கை எய்தி, விலைமதிப்பற்ற உயிர்களை தொடர்ந்து காத்திட, பொதுமக்கள் அனைவரும் மனமுவந்து தன்னார்வ இரத்த தானம் செய்திட முன்வரவேண்டும்என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் என கூறப்பட்டுள்ளது.

# கோவையில் உயிரை பறித்த வேகத்தடை.. திடீரென அமைக்கப்பட்டதால் நடந்த துயரம்

கோவை,அக்.1

கோவை கொடிசியா அருகில் புதிதாக அமைக்கப்பட்ட வேகத்தடையை அறியாமல் இருசக்கர வாகனத்தில் வந்த இளைஞர் நிலைதடுமாறி விழுந்து உயிரிழந்தார். இது தொடர்பான சிசிடிவி காட்சிகள் வெளியாகி உள்ளது.

கொடிசியாவில் புதிதாக அமைக்கப்பட்ட வேகத்தடையில் வெள்ளை நிற கோடு போடப்படாத நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை அன்று நள்ளிரவில் சூலூரைச் சேர்ந்த சந்திரகாந்த் உயிரிழந்தார்.

பொதுவாக வேகத்தடைகள் என்பது அந்த பகுதிகளில் விபத்து ஏற்படக்கூடாது,யாராவது வாகனத்தில் அடிப்பட்டு இறந்துவிடக்கூடாது என்ற நோக்கில் அமைக்கப்படுகிறது.ஆனால் என்ன ஒரு சிக்கல் என்றால், அந்த வேகத்தடைகள் வாகன ஓட்டிகளுக்கு ஆபத்தாகவே சில நேரங்களில் முடிகிறது.

இதேபோல் போக்குவரத்து போலீசார், வாகன ஓட்டிகளின் வேகத்தை குறைக்க தடுப்புகள் வைப்பார்கள். அப்படி வைக்கப்படும் தடுப்புகளால் பலரதும் விபத்தில் சிக்கி உயிரிழப்பது உண்டு. பொதுவாக தேசிய நெடுஞ்சாலைகளில் ஏற்படும் விபத்துக்ளுக்கு தடுப்புகளும் ஒரு காரணமாக இருக்கிறது. வேகத்தடை இன்னொரு காரணமாக இருக்கிறது.

பகலில் வாகன நெருக்கம் அதிகமாக இருக்கும் என்பதால் அந்த தடுப்புகள் அல்லது வேகத்தடைகளால் நல்லது நடந்தாலும்,நள்ளிரவில் வருவோருக்கு அது சில நேரங்களில் எமனாகவே இருக்கிறது. அப்படித்தான் கோவையில் திடீரென அமைக்கப்பட்ட வேகத்தடை ஒரு உயிரையே பறித்துள்ளது. என்ன நடந்தது என்பதை இப்போது பார்ப்போம்.





கோவை சூலூர் பகுதியை சேர்ந்த 26 வயது இளைஞர் சந்திரகாந்த், சேரன் மாநகரில் டிபார்ட்மென்டல் ஸ்டோர் வைத்து நடத்தி வந்திருக்கிறார். செப்டம்பர் 29ம்தேதியான நேற்று நள்ளிரவு 12 மணியளவில் கடையை மூடிவிட்டு, சந்திரகாந்த் இரு சக்கர வாகனத்தில் வீட்டிற்கு போய் கொண்டிருந்தார்.

கோவை கொடிசியா பகுதியில் சென்று கொண்டிருந்த போது தனியார் பள்ளி அருகே அமைக்கப்பட்டிருந்த வேகத்தடையில் தடுமாறி கீழே விழுந்து சந்திரகாந்த் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அந்த வேகத்தடை திடீரென புதிதாக புதிதாக அமைக்கப்பட்டிருந்தது தெரியாமல் வழக்கம் போல் வேகமாக வந்த சந்திரகாந்த் வேகத்தடையில் தடுமாறி கீழே விழுந்து இறந்திருக்கிறார் என்று அப்பகுதி மக்கள் கூறுகிறார்கள். திதாக அமைக்கப்பட்ட வேகத்தடையில் வெள்ளைநிற கோடு போடப்பட்டிருந்தால் அவர் உயிரிழந்திருக்க வாய்ப்பு குறைவு தான் என்றும் கூறுகிறார்கள்.

# 30 அடி பள்ளத்தில் பாய்ந்த பஸ்.. குன்னூரில் பலியான 8 பேர்.. நிவாரணம் அறிவித்த முதல்வர் ஸ்டாலின்

சென்னை,அக்.1

நீலகிரி மாவட்டம் குன்னூரில் 30 அடி பள்ளத்தில்கவிழ்ந்துசுற்றுலாபஸ்விபத்துக்குள்ளானதில் தென்காசி மாவட்டத்தை சேர்ந்த 8 பேர் பலியாகினர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர். இந்நிலையில் தான் முதல்வர் ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளதோடு, பலியானவர்கள், படுகாயமடைந்தவர்கள், லேசான காயமடைந்தவர்களுக்கு நிவாரணம் அறிவித்துள்ளார். தொடர்விடுமுறை காரணமாக தமிழகத்தை சேர்ந்த பலரும் சுற்றுலா தளங்களுக்கு சென்று வருகின்றனர். இந்நிலையில் தான் நீலகிரி மாவட்டம் ஊட்டிக்கு வெவ்வேறு மாவட்டங்களை சேர்ந்தவர்களும், வெளிமாநிலங்களை சேர்ந்தவர்களும் அதிகமாக வந்து செல்கின்றனர். இதனால் தற்போது ஊட்டியில் தற்போது சுற்றுலா பயணிகளின் கூட்டம் அலைமோதுகிறது. இந்நிலையில் தான் தென்காசி மாவட்டத்தை சேர்ந்தவர்கள் சுற்றுலா பஸ்சில் ஊட்டிக்கு சென்றனர். பஸ்சில் மொத்தம் 59 பேர் இருந்தனர். *Cauvery Water Dispute | Siddaramaiah* படத்திற்கு மாலை போட்ட தமிழக விவசாயிகள் | *Oneindia Tamil* 2 இந்த பஸ் குன்னூர் மேட்டுப்பாளையம் மரப்பாலம் அருகே வந்தது. அப்போது வளைவில் திடீரென்று டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் தடுப்புச்சுவரில் மோதி 30 அடி பள்ளத்தில் கவிழ்ந்தது. இதுபற்றி அறிந்தவுடன் தீயணைப்பு வீரர்கள், போலீசார் விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். இதில் 8 பேர் பலியாகினர்.





மேலும் பலர் படுகாயமடைந்த நிலையில் இன்னும் சிலர் காயமடைந்துள்ளனர். இவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இறந்தவர்களின் உடல் பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சுற்றுலா சென்று வீடு திரும்பியபோது பஸ் விபத்தில் 8 பேர் பலியான சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. இந்நிலையில் தான் முதல்வர் ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார். அதோடு நிதியுதவியையும் அறிவித்துள்ளார். அதன்படி விபத்தில் பலியானவர்களின் குடும்பத்துக்கு தலா ரூ.2 லட்சம், படுகாயமடைந்தவர்களுக்கு தலா ரூ.1 லட்சம், லேசான காயமடைந்தவர்களுக்கு ரூ.50 ஆயிரம் என நிவாரணம் அறிவித்துள்ளார். மேலும் காயமடைந்தவர்களுக்கு மருத்துவமனையில் சிறப்பு சிகிச்சை அளிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அதேபோல் இந்த விபத்துக்கு ஆளுநர் ஆர்என் ரவி மற்றும் தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை உள்பட பிற அரசியல் கட்சி தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

# ரூ.2000 நோட்டுகளை மாற்ற காலக்கெடு அக்.7 வரை நீட்டிப்பு: ரிசர்வ் வங்கி அறிவிப்பு

மும்பை,அக்.1

ரூ.2000 நோட்டுகளை மாற்றுவதற்கான காலக்கெடு அக்டோபர் 7ம் தேதி வரை நீட்டிக்கப்படுவதாக ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

ரூ.2000 நோட்டுகளின் புழக்கத்தை கட்டுப்படுத்தி வரும்ரிசர்வ்வங்கி, அதனை வங்கியில் மாற்றிக்கொள்வதற்கான காலக்கெடு செப்டம்பர் 30ம் தேதியுடன் முடிவடைவதாக ஏற்கெனவே அறிவித்திருந்தது.

அதோடு, செப்.30க்குள் ரூ.2000 நோட்டுக்களை மாற்றாவிட்டால் அது உங்களிடம் இன்னொரு தாளாக மட்டுமே இருக்கும் என்று ரிசர்வ் வங்கி கூறியது.

இந்நிலையில், ரூ.2000 நோட்டுகளை மாற்றுவதற்கான காலக்கெடு அக்டோபர் 7ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. அது வரை ரூ.2000 நோட்டுகளைவங்கிகளில்கொடுத்து மாற்றிக்கொள்ள முடியும். அதுமட்டுமின்றி, அக்டோபர் 7ம் தேதிக்குப் பிறகும் ரூ.2000 நோட்டுகள் செல்லும் என்றும், ஆனால்



அவற்றை ரிசர்வ் வங்கியின் பட்டியலிடப்பட்டுள்ள 19 அலுவலகங்களில் மட்டுமே மாற்றிக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனி நபர்கள் அல்லது நிறுவனங்கள் இவ்வாறு மாற்றிக்கொள்ள முடியும் என்றும், அதுவும் ஒரு நேரத்தில் அதிகபட்சம் ரூ.20,000 வரை மட்டுமே மாற்றிக் கொள்ள முடியும் என்றும் ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

இவ்வாறு ரிசர்வ் வங்கி அலுவலகத்தில் பணத்தை மாற்றுவதாக இருந்தால், பணத்தை தபால் அலுவலகம் மூலமாக மட்டுமே அனுப்ப முடியும் என்றும், அவ்வாறு அனுப்பப்படும் பணம் சம்பந்தப்பட்ட நபர் அல்லது நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுவது ரிசர்வ் வங்கியின் நிபந்தனைகளுக்கு உட்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில், நீதிமன்றங்கள், சட்ட அமைப்புகள், அரசு துறைகள் ஆகியவை ரூ.2000 நோட்டுகளை எவ்வளவு வேண்டுமானாலும் ரிசர்வ் வங்கியின் 19 அலுவலகங்களுக்கு அனுப்பி வரவு வைத்துக்கொள்ள முடியும் என்றும் ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த 2016ம் ஆண்டு நவம்பரில்ரூ.2000நோட்டு அறிமுகம் செய்யப்பட்டது. இந்த நோட்டுகளை கடந்த மே 19ம் தேதி ரிசர்வ் வங்கி திடீரென திரும்ப பெறுவதாக அறிவித்தது. 2023 செப்.30ம் தேதிக்கு பிறகு ரூ.2000 நோட்டுகள் செல்லாது என்றும், அந்த நோட்டுகளை வைத்திருப்பவர்கள் வங்கியில் ஒப்படைக்குமாறும் அறிவிப்பை வெளியிட்டது. தொடர்ந்து ரூ.2000 நோட்டுக்கள் மாற்றப்பட்டு வந்தன.

இந்நிலையில், கடந்த செப்டம்பர் 2ஆம் தேதி ரிசர்வ் வங்கி வெளியிட்ட அறிக்கை ஒன்றில் புழக்கத்தில்இருந்தரூ.2000 நோட்டுக்கள் 93 சதவீதம் திரும்பப் பெறப்பட்டுவிட்டதாகத் தெரிவித்தது. அதில் 87 சதவீதம் நோட்டுகள் வங்கிகளில் டெபாசிட் செய்யப்பட்டன என்றும் மீதமுள்ள 13 சதவீதம் வேறு நோட்டுகளாக மாற்றிக் கொள்ளப்பட்டன என்றும் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# ஓசூர் கடைகளில் அதிரடி சோதனை: சிரிஞ்ச் சாக்லெட்கள் பறிமுதல்

ஓசூர்,அக்.1

ஓசூரில் உள்ள கடைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த சிரிஞ்ச் சாக்லெட்களை உணவுப் பாதுகாப்புத் துறையினர் பறிமுதல் செய்தனர். கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் நகர பகுதிகளில் சிறுவர்களை கவரும் வகையில் சிரிஞ்ச் சாக்லெட்கள் விற்பனை செய்யப்படுகிறது.

இதில், தயாரிப்பு மற்றும் காலாவதி தேதி இல்லாமல் போலி முகவரியுடன் விற்பனை செய்வதாகவும், இதனை உணவுப் பாதுகாப்புத் துறை ஆய்வு செய்து தடுக்க வேண்டும்.

எனவும் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்த செய்தி கடந்த 26ம் தேதி 'இந்து தமிழ் திசை' நாளிதழில் வெளியானது.

இது தொடர்பாக, உணவுப் பாதுகாப்புத் துறை அலுவலர்கள் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும்படி, ஆட்சியர் சரயு உத்தரவிட்டார்.



இதனையடுத்து நேற்று உணவுப் பாதுகாப்புத் துறையின் நியமன அலுவலர் வெங்கடேசன் அறிவுறுத்தலின் பேரில் ஓசூர் உணவுப்பாதுகாப்பு அலுவலர் முத்துமாரியப்பன் தலைமையிலான குழுவினர், ஓசூர் பஜார், நாமல்பேட்டை, எம்ஜி ரோடு ஆகிய பகுதிகளில் உள்ள கடைகளில் சிரிஞ்ச் சாக்லெட்டுகள் உள்ளனவா என ஆய்வு செய்தனர்.

இதில்,சுமார்2.5கிலோ சிரிஞ்ச்சாக்லெட்டுகளை பறிமுதல் செய்து அவற்றிலிருந்து உணவு மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வுக்கூடத்திற்கு அனுப்பினர். இதுகுறித்து உணவுப் பாதுகாப்பு அலுவலர் முத்துமாரியப்பன் கூறும்போது, பறிமுதல் செய்யப்பட்ட சாக்லெட்டுகளில் தயாரிப்பு தேதி, பேட்ச் நம்பர், உரிமம் எண் எதுவும் இல்லை.

அதேபோல் யாரிடமிருந்து வாங்கப்பட்டது என்பதற்கான பில்லும் விற்பனையாளர்களிடம் இல்லை. இதனால், சம்பந்தப்பட்ட கடைக்காரர்களுக்கு உணவுப் பாதுகாப்புச் சட்ட விதிகளின் படி நோட்டீஸ் வழங்கி உள்ளோம். ஆய்வு அறிக்கை அடிப்படையில் கடை உரிமையாளர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும் இதுபோன்று முறையான லேபிள் அறிவிப்பு இல்லாத உணவு பொருட்களை வாங்கி விற்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும், எனக் கூறினார்.

# விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ரூ.40 லட்சத்தில் இருதய எக்கோ பரிசோதனைக் கருவி

விருதுநகர்,அக்.1

விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கூடங்குளம் அணுமின் நிலையம் சார்பில் ரூ.40 லட்சத்தில் நவீன இருதய எக்கோ பரிசோதனைக் கருவி வழங்கப்பட்டுள்ளது.

கூடங்குளம் அணுமின் நிலையசமுதாயபொறுப்பு நிதியின் கீழ் ரூ.40 லட்சத்தில் நவீன இருதய எக்கோ பரிசோதனைக் கருவி வழங்கப்பட்டுள்ளது. இதனை பொதுமக்களுக்காக அர்ப்பணிக்கும் நிகழ்ச்சி விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் வீ.ப.ஜெயசீலன் கலந்து கொண்டு நவீன எக்கோ பரிசோதனை அறையை ரிப்பன் வெட்டித் திறந்து



வைத்தார். மேலும், கூடங்குளம் அணுமின் நிலையம் சார்பில் வழங்கப்பட்டுள்ள நவீன இருதய எக்கோ பரிசோதனைக் கருவியின் செயல்பாட்டையும் தொங்கி வைத்தார்.

இதுகுறித்து டீன் சங்குமணி கூறுகையில், "தமிழகத்தில் புதிதாக தொடங்கப்பட்ட 11 அரசு மருத்துவக் கல்லூரிகளில் இதுவரை இல்லாத வகையில் முதன் முறையாக இந்த நவீன இருதய எக்கோ பரிசோதனைக் கருவி வாங்கப்பட்டுள்ளது. கூடங்குளம் அனுமின்நிலையம் சார்பில் ஏற்கெனவே பல லட்சம் நிதி அளிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், தற்போது வாங்கப்பட்டுள்ள இக்கருவி மூலம் மிக மெல்லிய நரம்புகளில் உள்ள சிறு அடைப்புகளையும் மிகத் துல்லியமாக கண்டறிந்து சிகிச்சை அளிக்க முடியும். விருதுநகர் மாவட்டத்தில் முதன் முறையாக இந்த எக்கோ பரிசோதனைக் கருவி பெறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது" என்றார்.

இந்நிகழ்ச்சியில் டீன் சங்குமணி, இருக்கை மருத்துவ அலுவலர் முருகேசன், பச்சிளம் குழந்தைகள் பிரிவு மருத்துவர் ஜவகர், குழந்தைகள் சிறப்பு மருத்துவர் அரவிந்த்பாபு, கூடங்குளம் அணுமின் நிலைய திட்ட தலைமை முதன்மையர் பண்டாரம், உறுப்பினர் செயலர் பத்மா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# குறைந்த ஊதியத்தில் பணிபுரியும் ஆசிரியர்கள்: மக்கள் கல்விக் கூட்டியக்கம் குற்றச்சாட்டு

மதுரை,அக்.1

தனியார் பள்ளி, கல்லூரிகளில் குறைந்த ஊதியத்தில் ஆசிரியர்கள் பணியாற்றி வருவதாக மக்கள் கல்வி கூட்டியக்க நிர்வாகிகள் அதிருப்தி தெரிவித்தனர். நியாயமான ஊதியம் உள்ளிட்ட ஆசிரியர்களின் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மக்கள் கல்வி கூட்டியக்கம் சார்பில், மதுரை கே.கே.நகரில் நாளை (அக்.1) மாநில மாநாடு நடக்கிறது.

இதையொட்டி, மதுரையில் நேற்று அவ்வியக்கத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் முரளி செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகம் கல்வியில் உச்சம் தொட்டு விட்டதாக பிரச்சாரம் செய்கின்றனர். ஆனால், ஆயிரக்கணக்கான ஆசிரியர்களின் நிலைமை கேள்விக்குறியாக உள்ளது.

தனியார் கல்வி நிறுவனங்களில் நிலையற்ற பணியில் குறைந்த ஊதியத்தில் பல ஆண்டுகளாக ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இந்நிலை தற்போது அரசு பள்ளிகளிலும் ஏற்பட்டு வருகிறது. நிலையான பணி என்றால் அரசு விதிப்படி ஊதியம் வழங்க வேண்டும் என்பதால் அதை தவிர்க்க விரும்புகின்றனர்.

அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பல லட்சம் லஞ்சம் கொடுத்தால் வேலை என்ற நிலை உள்ளது. அரசுப் பள்ளிகளில் 13,000க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பகுதிநேர ஊழியர்களாக சொற்ப ஊதியத்தில் பல ஆண்டுகளாக பணிபுரிகின்றனர்.

7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரசு கல்லூரிகளில் கவுரவவிரிவுரையாளர்கள் குறைந்த தொகுப்பூதியத்தில் பணிபுரிகின்றனர். பல்கலைக்கழக மாநிலக் குழு (யுஜிசி) பரிந்துரைத்த ரூ. 57,700 ஊதியத்தை வழங்காமல் அவர்களின் உழைப்பை சுரண்டு கின்றனர். தனியார் பள்ளி, கல்லூரிகளில் அதிக கல்விக் கட்டணம் வசூலிக்கின்றனர். ஆனால், ஆசிரியர்களுக்கு சொற்ப ஊதியமே வழங்குகின்றனர்.

இதுபோன்ற நிலைக்கு தீர்வுகாண, மாநிலத்தில் 40க்கும் மேற்பட்ட அமைப்புகள், இயக்கங்கள் இணைந்த மக்கள் கல்வி கூட்டியக்கம் சார்பில், ஆசிரியர்களுக்கான கோரிக்கை மாநாட்டை மதுரையில் நடத்துகிறோம்.

இம்மாநாட்டில் எம்பிக்கள் தொல். திருமாவளவன், சு. வெங்கடேசன் மற்றும் நீதிபதி அரி பரந்தாமன், கல்வியாளர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் பங்கேற்று பேசுகின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

மதுரை காமராசர் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் சீனிவாசன் உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# திருச்சி மாநகர வெள்ளத் தடுப்பு திட்டத்தில் அரியாறை சீரமைக்க அள்ளித்தான் தரல; கிள்ளியாவது தரக்கூடாதா?

திருச்சி,அக்.1

திருச்சி மாநகரில் வெள்ளத் தடுப்புத் திட்டத்துக்காக அரியாறை ஒட்டியுள்ளதனியார்நிலங்களை கையகப்படுத்தவும், கான்கிரீட் கரைகள் அமைக்கவும் ரூ.405 கோடி செலவாகும் என தமிழக அரசுக்கு திருச்சி நீர் வளத் துறையின் அரியாறு வடிநிலக் கோட்டம் அனுப்பிய கருத்துரு இன்னும் கிடப்பில் உள்ளது.

எனவே, அரியாறு கரையில் உடைப்பு ஏற்பட்ட 7 இடங்களில் கான்கிரீட் தடுப்பு அமைக்க ரூ.4 கோடிக்கான கருத்துருவையாவது அரசு கவனத்தில் கொண்டு, விரைந்து நிதி ஒதுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

திருச்சி மாநகரின் தென் மேற்கு நுழைவாயிலான தீரன்நகர் கருமண்டபம் பகுதியில் அரியாறு, கோரையாறு, உய்யக்கொண்டான் வாய்க்கால் ஆகியவை திருச்சி ஆட்சியர் அலுவலகம் பின்புறம் உள்ள குழுமாயி அம்மன் கோயில் அருகே சங்கமிக்கின்றன.

உய்யக்கொண்டான் ஆறு மட்டுமே பாசன வாய்க்கால். இந்த வாய்க்கால் தொட்டிபாலம் வழியாக நகருக்குள் செல்கிறது. அரியாறு, கோரையாறு இரண்டும் தொட்டிப்பாலத்துக்கு அடியில் கடந்து குடமுருட்டி வழியாக காவிரியில் கலக்கின்றன.

மழைக்காலங்களில் அரியாறு, கோரையாறில் பெருக்கெடுக்கும் வெள்



ளம் காரணமாக, மணிகண்டம் ஒன்றியத்தின் வடக்குப்பகுதிகளானதாயனூர், அதவத்தூர், அல்லித்துறை, புங்கனூர், சோமரசம்பேட்டை, நாச்சிக்குறிச்சி, குமாரவயலூர் ஆகிய ஊராட்சி பகுதிகள், அந்தநல்லூர் ஒன்றியத்தின் முள்ளிக்கரும்பூர், குழுமணி, மேக்குடி, மருதாண்டாக்குறிச்சி, மல்லியம்பத்து, திருச்சி மாநகருக்குட்பட்ட பிராட்டியூர், உய்யக்கொண்டான் திருமலை, சீனிவாசா நகர், குமரன் நகர், உறையூர் பகுதி மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்றனர்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட வெள்ளத்தால் இப்பகுதிகளில் உள்ள விவசாய நிலங்கள், குடியிருப்புப் பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டன. திருச்சி மாநகர், புறநகர் பகுதிகளில் வெள்ளத்தால்பாதிக்காதவகையில், அரசு திட்டங்களை அறிவித்தாலும், அதை முறையாக செயல் படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது. ரூ.405 கோடியில் திட்டம் திருச்சி பெருவெள்ளத் தடுப்புத் திட்டத்துக்காக, குறிப்பாக அரியாறு பகுதியில் உள்ள நிலங்களை கையகப்படுத்துவது, கான்கிரீட் சுவர், கரை அமைப்பது போன்றவற்றுக்காக மொத்தம் ரூ.405 கோடியில் திட்டம் தயாரித்து திருச்சி நீர் வளத் துறையின், அரியாறு வடிநிலக் கோட்டம் அரசுக்கு கருத்துரு அனுப்பி உள்ளது. ஆனால், அரசின் நிதித்துறையோ, ஒரு மாவட்டத்துக்கு இவ்வளவு தொகை ஒதுக்க முடியாது என கூறி அத்திட்டத்தை அப்படியே கிடப்பில் போட்டுள்ளதாக அதிகாரிகள் தெரி விக்கின்றனர்.

இதுகுறித்து அரியாறு வடிநிலக்கோட்ட அதிகாரி ஒருவர் கூறும்போது, ''அரியாறில் ஆக்கிரமிப்புகளை அகற்றி அகலப்படுத்தி, கான்கிரீட் சுவர் அமைக்கரூ.405கோடிக்கு பெருவெள்ளத் தடுப்புத் திட்டம் தயாரித்து அரசுக்கு கருத்துரு அனுப்பினோம். நிதிப்பற்றாக்குறையால் மாற்று ஏற்பாடு செய்யும்படி அறிவுறுத்தினர்.

இது தவிர, அல்லித்துறையிலிருந்து தீரன் நகர் வரை அரியாறு கரைகளில் கடந்த 2021ல் வெள்ளத்தால் 7 இடங்களில் ஏற்பட்ட உடைப்பு பகுதியில் கான்கிரீட்தடுப்புஅமைக்க ரூ.4 கோடியில் திட்டம் தயாரித்து அனுப்பி உள்ளோம். அந்த தொகையாவது வந்தால் அரியாறு கரை உடைப்புப்பகுதிகள் சரிசெய்யப்படும்.

கோரையாறில் கடந்த ஆண்டு ரூ.1.20 கோடி மதிப்பில் தூர்வாரி கரைகள் பலப்படுத்தப்பட்டதால் அந்த ஆற்றின் மூலம் வெள்ளம் பாதிப்பு ஏற்படாது'' என்றார்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# அசுர வேகத்தில் செல்லும் பேருந்துகளால் விபத்து அபாயம்: உரிய நடவடிக்கை எடுக்க சேலம் மக்கள் கோரிக்கை

சேலம்: அசுர வேகத்தில் ஏர் ஹாரனை அலறவிட்டபடி செல்லும் பேருந்துகளால் விபத்து, உயிரிழப்பு அபாயம் அதிகரித்துள்ளது. இதனை தடுக்க சட்ட திட்டங்களை கடுமையாக்கி விபத்தில்லா பயணத்துக்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சேலம் மாவட்டம் மகுடஞ்சாவடியைச் சேர்ந்த குமரேசன் (42) என்பவர் சங்ககிரி தேசிய நெடுஞ்சாலையில் இருசக்கர வாகனத்தில் சென்றபோது, அதிவேகத்தில் வந்த தனியார் பேருந்து மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இது போன்று தினமும் பல உயிர்களை பேருந்துகள் தங்களது அசுர வேக பயணத்தால் பறித்துச் செல்கின்றன. இதனால், உயிரிழப்பவர்களின் ஒட்டு மொத்த குடும்பத்தினரின் எதிர்கால வாழ்க்கை பெரும் கேள்விக்குறியாகி வருகிறது.

"தனியார் பேருந்துகளின் ஓட்டுநர்களும், நடத்துநர்களும் உரிமையாளருக்கு வருவாயை ஈட்டிக் கொடுக்கும் நோக்கத்துடன் முன்னால் செல்லும் பேருந்துகளை முந்திச் செல்வதில் போட்டி போடுவதாலே, அப்பாவி மக்கள் தங்களின் இன்னுயிரை இழக்கின்றனர். இது போன்ற உயிரிழப்புகளை தடுக்க அதிகாரிகள் கடும் நடவடிக்கை எடுப்பது காலத்தின் கட்டாயமாகியுள்ளது" என்கின்றனர் பொதுமக்கள்.

சட்டம் என்ன சொல்கிறது? இதுகுறித்து சேலம் கிழக்கு வட்டார போக்குவரத்து அலுவலர் தாமோதரன் கூறியது: வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கனரக வாகனங்களை ஆய்வுக்கு கொண்டு வரும் போது, அதில் 80 கிமீ வேகம் செல்லும் வகையில் வேகக்கட்டுப்பாட்டு கருவி பொருத்தப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்த பின்னரே தரச்சான்று வழங்கப்படுகிறது.

சில தனியார் பேருந்துகளில் வேகக்கட்டுப்பாட்டு கருவி இணைப்பை துண்டித்து விட்டும், அதனை கழற்றி வைத்து விட்டும் இயக்குவது உண்டு. இது போன்ற வாகனங்கள் வட்டார போக்குவரத்து ஆய்வாளர்கள் ஆய்வின்போது பிடிபடும் நிலையில் ரூ.500 அபராதம் விதிக்கப்படுகிறது. பயணிகளை ஏற்றிச் செல்லும் தனியார் பேருந்து ஓட்டுநர்கள், தங்களது தார்மீக பொறுப்பை உணர்ந்து கட்டுப்பாடான வேகத்தில் சென்றால் விபத்து, உயிரிழப்புகளை தடுக்கலாம்.

அதேபோல, தனியார் பேருந்துகளில் மியூசிக்கல் ஹாரன்களை அலறவிடுவது சாலையில் செல்பவர்களை பதைபதைக்க வைக்கிறது. கனரக வாகனங்களில் அதிகபட்சமாக 85 டெசிபல் முதல் 90 டெசிபல் வரையிலான ஒலி அளவீடுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனை மிஞ்சும் வகையிலான ஹாரன்களால் முதலில் பாதிக்கப்படுவது, அதனை பயன்படுத்தும் பேருந்து ஓட்டுநர்கள்தான் என்பதை அறிய வேண்டும். அதிக ஒலி எழுப்பும் ஹாரன்களை பயன்படுத்தும் வாகனங்களுக்கு ரூ.10 ஆயிரம் வரை அபராதம் விதிக்கப்படுகிறது.

தேசிய நெடுஞ்சாலைகளில் அவ்வப்போது திடீர் ஆய்வு செய்து, பேருந்துகளில் வேகக்கட்டுப்பாடு கருவி பொருத்தப்பட்டுள்ளதா என்றும் அதிவேகமாக செல்லும் வாகனங்களை கண்காணித்தும் தொடர்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

'டைமிங்' பிரச்சினை: இதுகுறித்து போலீஸார் தரப்பில் கூறியதாவது: தனியார் பேருந்துகள் அதிகப்படியான வேகத்துடன் செல்வதற்கு முக்கிய காரணமாக 'டைமிங்' பிரச்சினை உள்ளது என்பதே நிதர்சனம். கடந்த 50, 60 ஆண்டுகளுக்கு முன்பு புதியதாக பேருந்துகளுக்கு 'பர்மிட்' வழங்கும் போது, அக்காலக்கட்டத்தில் இருந்த வாகன பெருக்கம், சாலையில் போக்குவரத்து நெரிசல், பேருந்து நிறுத்துமிடம், சாலை வசதிகளை கொண்டு நேரம் நிர்ணயிக்கப்பட்டது. குறிப்பிட்ட நேரத்துக்குள் பேருந்து நிலையத் துக்குள் பேருந்து வராமல் நேரம் கடந்து வந்தால் பேருந்து நிலையத்தில் இருந்து அடுத்த 'ட்ரிப்'க்கான அனுமதியை 'டைமிங் அலுவலர்' மறுத்துவிடுவார்.

இதனால், ஓட்டுநர், நடத்துநர்கள் உரிமையாளர்களிடம் பதில் கூற வேண்டிய கட்டாயமும், அவர்களின் வருமானத்தில் பிடித்தம் செய்யும் நிலையும் உண்டு. இந்நிலையில், இன்றைய காலக்கட்டத்தில், வாகன பெருக்கம், அதிகப்படியான பேருந்து நிறுத்துமிடம், சாலையில் போக்குவரத்து நெரிசல் உள்ளிட்ட காரணங்களால் குறித்த நேரத்துக்குள் செல்ல பேருந்துகளை வேகமாக இயக்குவதால் விபத்து, உயிரிழப்பு சாதாரணமாகியுள்ளது.

மேலும், பேருந்து நிறுத்துமிடங்களில் பயணிகளை ஏற்றிச் செல்லும் போட்டியில் தனியார் பேருந்துகள் முந்திச் செல்லும்போது வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் பயணிகளை பயமுறுத்தும் சம்பவங்களும் நடக்கிறது. இதுதொடர்பாக ஓட்டுநர்கள் மீது சட்டரீதியாக வழக்குப் பதிவு செய்தாலும், அபராதத்தை எளிதாக செலுத்தி விட்டு தப்பி விடுகின்றனர்.

இன்றைய சூழலுக்கு ஏற்ப போக்குவரத்து சட்டத்திட்டங்களை கடுமையாக மாற்றுவதன் மூலமாகவும், டைமிங் பிரச்சினைக்கு தீர்வு காண்பது உள்ளிட்டவற்றின் மூலமாகவும் விபத்து சம்பவங்களை கட்டுக்குள் கொண்டு வர முடியும், என்றனர்.

அரசுப் பணியில் வேகம் வேண்டும்: தனியார் பேருந்து உரிமையாளர்கள் கூறும்போது, 'சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டு சாலை விதிமுறைகளை கடைபிடித்தே தனியார் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. சிலநேரங்களில் சாலைப்பணிக்காக குழி தோண்டுவதால் மாற்றுப் பாதையில் பேருந்துகள் திருப்பிவிடும் நிலை ஏற்படும்போது நேரம் போதாமல் ஓட்டுநர்கள் வேகமாக செல்ல வேண்டியுள்ளது.

ஏர் ஹாரன் உள்ளிட்டவற்றை பெரும்பாலும் தனியார் பேருந்துகள் பயன்படுத்துவது கிடையாது. ஏதோ ஒரு சில பேருந்துகளில் பயன்படுத்துவதால், ஒட்டு மொத்தமாக குற்றம்சாட்டி விட முடியாது.

சாலை வசதிகளை மேம்படுத்துவதன் மூலமாகவும், குறுக்கிடும் பாலப்பணி, பாதாள சாக்கடை பணி போன்ற உட்கட்டமைப்பு விரிவாக்கத்தை அரசு விரைந்து முடிப்பதன் மூலமாகவும் தேவையில்லாத விபத்து சம்பவங்களை தடுக்க முடியும். சாலை விபத்துகளை தடுக்க தனியார் பேருந்துகள் மட்டுமல்லாமல் அரசு அதிகாரிகளின் சீரிய நடவடிக்கை, சாலை போக்குவரத்தில் மக்களிடம் விழிப்புணர்வு போன்றவை அவசியம், என்றனர்.

# 30 அடி பள்ளத்தில் மரத்தில் தொங்கிய பஸ்: குன்னூர் விபத்தில் 8 பேர் இறந்தது எப்படி?

சென்னை,அக்.1

நீலகிரி மாவட்டம் குன்னூரில் 30 அடி பள்ளத்தில் கவிழ்ந்து சுற்றுலா பஸ் விபத்துக்குள்ளானதில் தென்காசி மாவட்டத்தை சேர்ந்த 8 பேர் பலியாகினர். இந்நிலையில் தான் விபத்து எப்படி நடந்தது? என்பது குறித்த ஷாக் தகவல் வெளியாகி உள்ளது.

தொடர் விடுமுறை காரணமாக பொதுமக்கள் பல்வேறு இடங்களுக்கு சுற்றுலா சென்று வருகின்றனர். குறிப்பாக நீலகிரி மாவட்டம் ஊட்டி, தென்காசி மாவட்டம் குற்றாலம், திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் உள்ளிட்ட இடங்களுக்கு ஏராளமான மக்கள் வந்து செல்கின்றனர். இதனால் இந்த இடங்களில் தற்போது மக்கள் கூட்டம் அலைமோதுகிறது. தமிழ்நாட்டின் வெவ்வேறு மாவட்டங்களை சேர்ந்தவர்களும், வெளி மாநிலங்களை சேர்ந்தவர்களும் கார், பஸ்களில் பெரும்படையாக வந்து செல்கின்றனர். இந்நிலையில் தான் நீலகிரி மாவட்டம் ஊட்டியில் தற்போது சுற்றுலாபயணிகளின் கூட்டம் அலைமோதுகிறது. தென்காசி மாவட்டத்தை சேர்ந்தவர்கள் ஊட்டிக்கு



சுற்றுலா சென்றனர். இவர்கள் இன்று ஊட்டியை சுற்றுப்பார்த்துவிட்டு சுற்றுலா பஸ்சில் தென்காசி புறப்பட்டனர். பஸ்சில் மொத்தம் 59 பேர் இருந்தனர். இந்த பஸ் குன்னூர் மேட்டுப்பாளையம் மரப்பாலம் அருகே வந்த போது டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து 30 அடி பள்ளத்தில் கவிழ்ந்தது. இதையடுத்து பஸ்சில் இருந்த 8 பேர் பலியான நிலையில் ஏராளமானவர்கள் படுகாயமும், காயமும் அடைந்துள்ளனர். காயமடைந்தவர்களை போலீசார் மற்றும் தீயணைப்பு வீரர்கள் மீட்டு மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். அவர்களுக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இந்நிலையில்தான் தான் குன்னூரில் சுற்றுலா பஸ் விபத்து எப்படி நடந்தது? என்பது பற்றிய ஷாக் தகவல் வெளியாகி உள்ளது. அதாவது சுற்றுலா பஸ் குன்னூர்மேட்டுப்பாளையம் மரப்பாலம் அருகே வந்து கொண்டிருந்தது. அப்போது திருப்பம் இருந்தது. இதையடுத்து திருப்பத்தில் பஸ் திரும்ப முயன்றபோது திடீரென்று டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்துள்ளது. இதையடுத்து கண்இமைக்கும் நொடியில் சாலையில் இருந்து 30 அடி பள்ளத்தில் தலைகீழாக பஸ் கவிழ்ந்துள்ளது. பள்ளத்தில் இருந்த மரத்தில் பஸ் சிக்கி அந்தரத்தில் தொங்கியது. அதன்பிறகு கீழே விழுந்துள்ளது. இதனால் அதில் இருந்தவர்கள் அனைவரும் காப்பாற்றும்படி கூச்சலிட்டுள்ளனர்.

இந்த சத்தம் கேட்டவுடன் அருகே இருந்தவர்கள் உடனடியாக போலீசார் மற்றும் தீயணைப்பு வீரர்களுக்கு தகவல் தெரிவித்தனர். அவர்கள் விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். இதில் 3 பேர் சம்பவ இடத்தில் பலியாகி இருப்பது தெரியவந்தது. மேலும் காயம், படுகாயம் என மொத்தம் 40 பேர் வரை பாதிக்கப்பட்டு இருப்பது தெரியவந்தது. இதையடுத்து அவர்கள் மீட்கப்பட்டு அருகே உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு 5 பேர் பலியாகி உள்ளனர். இதனால் உயிரிழப்பு 8 ஆக அதிகரித்தது. மற்றவர்களுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. முன்னதாக சுற்றுலாத்துறை அமைச்சர் கா ராமச்சந்திரன் விபத்து நடந்த இடத்தில் நடைபெற்று வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட்டு துரிதப்படுத்தினார். அதோடு காயம், படுகாயமடைந்தவர்களுக்கு மருத்துவமனையில் சிறப்பு சிகிச்சை அளிக்கவும் முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

# மதுரையில் அக். 1 முதல் முக்கிய வழித்தடத்தில் போக்குவரத்து மாற்றம்: போலீஸார் அறிவிப்பு

மதுரை,அக்.1

மதுரையில் அக்டோபர் 1 முதல் 26 ஆம் தேதி வரை சில முக்கிய வழித்தடத்தில் போக்குவரத்து மாற்றம் செய்யப்படுவதாக மதுரை மாநகரப் போக்குவரத்து போலீசார் தெரிவித்துள்ளனர்.

போக்குவரத்து மாற்றம் ஏன்? : மதுரை செல்லூர் தத்தனேரி ரயில்வே மேம்பாலத்தில்பாலம்இணைக்கும் பணிகள் நடைபெறுவதால் பாலத்தின் இருமார்க்கமும் போக்குவரத்து மாற்றம் செய்யப்படுகிறது.

மதுரை மாநகர போக்குவரத்து போலீசார் வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, அக்டோபர் 1ம் தேதி முதல் கீழ்கண்ட போக்குவரத்து மாற்றங்கள் செய்யப்படுகின்றன.

திண்டுக்கல் சாலை வழியாக ஆரப்பாளையம் வரும் பேருந்துகள் பாத்திமா கல்லூரி சந்திப்பு வலது புறம், குரு தியேட்டர் சந்திப்பில் இடதுபுறம்



திரும்பி ஆரப்பாளையம் செல்ல வேண்டும்.

கோரிப்பாளையம் பகுதியில் இருந்து வரும் வாகனங்கள் ஏவி பாலம் யானைகள் சந்திப்பு, சிம்மக்கல் ரவுண்டானா, தமிழ்ச்சங்கம் ரோடு வழியாக ஆரப்பாளையம் செல்ல வேண்டும்.

இதேபோல் மறுமார்க்கமாக தமிழ்ச் சங்கம் ரோடு, சிம்மக்கல் ரவுண்டானா, யானைகள் சந்திப்பு, புது பாலம் சந்திப்பு வலது புறம் திரும்பி, கோரிப்பாளையம் சந்திப்பை அடையலாம்.

திண்டுக்கல் சாலை வழியாக நகருக்குள் வரும் அத்தியாவசிய கனரக வாகனங்கள் பாத்திமா கல்லூரி சந்திப்பு வலது, குரு தியேட்டர் சந்திப்பு, காளவாசல் சந்திப்பு இடது, அரசரடி சந்திப்பை அடைந்து தமிழ்ச் சங்கம் ரோடு வழியாக வரலாம்.

இதேபோல் பாத்திமா கல்லூரி சந்திப்பு இடது, கூடல் நகர் ரயில்வே மேம்பாலம், ஆனையூர், ஐயர் பங்களா சந்திப்பு, பொது நத்தம் சாலை வழியாகவும் மற்றும் மூன்று மாவட்ட சந்திப்பு, அழகர் கோவில் சாலை வழியாகவும் கோரிப்பாளையம் செல்லலாம்.

திண்டுக்கல் சாலை வழியாக நகருக்குள் வரும் இரு சக்கர வாகனங்களான இலரகு நான்கு சக்கர வாகனங்கள் செல்லூர் பாலம் வரும் வரை எந்த மாற்றமும் இல்லை. செல்லூர் பாலத்தின் இடதுபுறம், தத்தனேரி சப்வே வழியாக பாலம் ஸ்டேஷன் ரோட்டை அடைந்து கோரிப்பாளையம் பகுதிக்கு போகலாம்.

மறு மார்க்கமாக கோரிப்பாளையம் சந்திப்பில் இருந்து செல்பவர்கள் செல்லூர் பாலம் வரை எந்த மாற்றமும் இல்லை. செல்லூர் பாலத்தின் இடதுபுறம் அடியில் சர்வீஸ் சாலையில் சென்று சப்வே வழியாக தத்தனேரி சந்திப்பில் இடதுபுறம் திரும்பி வைகை வடக்கரை சாலையை அடைந்து அம்மா பாலம் சந்திப்பு வழியாக செல்லலாம்" இவ்வாறு மதுரை மாநகர போக்குவரத்து போலீசார் அறிவித்துள்ளனர்.

# மேட்டூர் அணை நீர் மட்டம் மளமளவென சரிவு: நீர் இருப்பு வெறும் 10 டிஎம்சிதான்

சேலம்,அக்.1

மேட்டூர் அணையின் நீர் மட்டம் 37.50 அடியாகவும்,அணையின்நீர்இருப்பு 10.83 டி.எம்.சி ஆகவும் உள்ளது. அணைக்கு வரும் நீரின் அளவு 4,524 கன அடியாக குறைந்துள்ளது. மழை பெய்தால் மட்டுமே குறுவை சாகுபடியை காப்பாற்ற முடியும் சம்பா சாகுபடியை தொடங்க முடியும் என்பது விவசாயிகளின் கவலையாகும். குறுவை, சம்பா சாகுபடி பாசனத்திற்காக மேட்டூர் அணையிலிருந்து 90 வது ஆண்டாக ஜூன் 12 ஆம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. சேலம், கரூர், திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, கடலூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் குறுவை, சம்பா சாகுபடிக்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. தற்போது குறுவை, சம்பா அறுவடைக்கு தயாராக உள்ள நிலையில் மேட்டூர் அணையில் இருந்து குறைந்த அளவு தண்ணீர் மட்டுமே திறக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் 12 டெல்டா



மாவட்டங்களில் உள்ள 17 லட்சம் ஏக்கர் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு பருவமழை ஏமாற்றியதால் நடப்பாண்டு மேட்டூர்அணை நீர் மட்டம் அதள பாதாளத்திற்கு சரிந்துள்ளது. கர்நாடகா அணைகளில் தண்ணீர் இருந்தும் நீர் தர அம்மாநில அரசு தயாராக இல்லை. போராடினாலும் தண்ணீர் தர மறுக்கிறது கர்நாடகா அரசு. காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டும் தண்ணீர் தரக்கூடாது என்று கர்நாடகா மாநில விவசாயிகள் பந்த் நடத்துகின்றனர். நேற்று முன்தினம் அணைக்கு வினாடிக்கு 7,070 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்த நிலையில் நேற்றைய தினம் அணைக்கு வரும் நீரின் அளவு 5,299 கன அடியாக இருந்தது. இந்த நிலையில் இன்று காலை அணைக்கு வரும் நீரின் அளவு 4,524 கன அடியாக குறைந்துள்ளது. அணையின் நீர் மட்டம் 37.50 அடியாகவும், அணையின் நீர் இருப்பு 10.83 டி.எம்.சி ஆகவும் உள்ளது. மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்காக வினாடிக்கு 6,500 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. கர்நாடகாவில் இருந்து குறைந்த அளவு தண்ணீர் மட்டுமே திறக்கப்பட்டுள்ளதால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் சரிந்து வருகிறது. மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்படும் தண்ணீரில் இருந்து அணை மின் நிலையம் மற்றும் சுரங்க மின் நிலையத்தின் வழியாக தண்ணீர் திறக்கப்பட்ட நிலையில் மின் உற்பத்தி தொடங்கியுள்ளது. அணையில் தண்ணீர் மிகவும் குறைவாக உள்ளதால் 16 கண் மதகுகள் மூடப்பட்டுள்ளது. 5 கண் மதகு வழியாக மட்டுமே தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

கிழக்கு மற்றும் மேற்கு கால்வாய் பாசனத்திற்காக திறக்கப்பட்டிருந்த தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது. குடிநீர் தேவைக்காக மேட்டூர் அணையில் இருந்து 1,500 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. குறுவை பயிர் கருகி வரும் நிலையில் அதை காப்பாற்றவே இன்னும் 20 நாட்களுக்கு தண்ணீர் தேவைப்படும். தண்ணீர் இல்லாத காரணத்தால் நடப்பாண்டு சம்பா சாகுபடி கேள்விக்குறியாகி உள்ளது என விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

# நாடாளுமன்றத் தேர்தலுக்கு தயாராகும் எஸ்.டி.பி.ஐ: மதுரையில் மதச்சார்பின்மை பாதுகாப்பு மாநாடு!

மதுரை,அக்.1

எஸ்.டி.பி.ஐ. கட்சி சார்பில் மதுரையில் வரும் டிசம்பர் மாதம் மதச்சார்பின்மை பாதுகாப்பு மாநாடு நடைபெறும் என அக்கட்சியின் மாநிலத் தலைவர் நெல்லை முபாரக் அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கும் நிலையில் இந்த மாநாட்டை எஸ்.டி.பி.ஐ. கட்சி நடத்த விருப்பது குறிப்பிடத்தக்கது.

மதுரையில் இன்று செய்தியாளர்களை சந்தித்த போது, மதச்சார்பின்மை மாநாடு குறித்து முபாரக் கூறியதாவது;

" இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிநாதங்களில் ஒன்று மதச்சார்பின்மையாகும். அரசின் சேவைகள், குடிமக்களு க்கான உரிமைகளில் எவ்வித பாரபட்சமும் இருக்கக் கூடாத என்பதற்காகத் தான் இந்திய அரசியலமைப்புச் சட்டம் மதச்சார்பின்




மையை தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறது."

"நாட்டின் உன்னதமான மதச்சார்பின்மை மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. பல்வேறு வழிகளில் மதச்சார்பின்மைக்கு எதிராக ஆபத்துக்கள் அதிகரித்துள்ளன. அரசியலமைப்பு சாசனத்திலிருந்து மதச்சார்பின்மை மற்றும் சோசலிசம் வார்த்தைகளை நீக்கும் நடவடிக்கைகளை ஆளும் ஒன்றிய பாஜக அரசே செய்து வருகின்றது.""மதச்சார்பின்மை மீதான மறைமுகத் தாக்குதல்கள் அரசின் ஆதரவுடன் இப்போது நேரடியாகவும் வெளிப்படையாக கவும் மாறிவிட்டன. மக்களுக்கிடையே பிளவை ஏற்படுத்தும் நிகழ்வுகள் அதிகரித்துள்ளன. மதவெறு ப்புகள் அங்கிங்கெனாதபடி நாட்டின் அனைத்து இடங்களிலும் நீக்கமற நிறைந்து காணப்படுகின்றன."

"இவையெல்லாவற்றிற்கும் தீர்வாக, அரசியலமைப்பை, அதன் உன்னத உயர்ந்த கோட்பாடுகளை உயர்த்திப் பிடிக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. ஆகவே, நாட்டின் அரசமைப்புச் சட்டத்தின் மாண்பை காக்கவும், நாட்டின் ஜனநாயகம் மற்றும் மதச்சார்பின்மையின் லட்சியங்களை நிலை நிறுத்தவும் 'வெல்லட்டும் மதச்சார்பின்மை!' என்ற முழக்கத்தோடு எதிர்வரும் டிசம்பர் மாதம் மதுரை மாநகரில் மாபெரும் 'மதச்சார்பின்மை பாதுகாப்பு மாநாடு' நடத்த எஸ்.டி.பி.ஐ. கட்சி திட்டமிட்டுள்ளது."

" நாட்டின் அரசியலமைப்புச் சட்டம் உறுதி செய்துள்ள மதச்சார்பின்மையை காக்கும் நோக்கில் நடத்தப்படும் இந்த மாநாட்டில், அனைத்து மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகளும் கலந்து கொண்டு மாநாட்டை வெற்றிபெறச் செய்திட வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்."

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# குன்னூரில் சுற்றுலா பஸ் கவிழ்ந்து விபத்து: 8 பேர் பலி: அண்ணாமலை இரங்கல்

நீலகிரி,அக்.1

குன்னூர் அருகே மலைப்பாதையில் 50 அடி பள்ளத்தில் சுற்றுலா பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 8 பேர் பலியாகினர். இந்த நிலையில் உயிரிழந்தோரின் குடும்பத்திற்கு இரங்கல் தெரிவித்து தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை ட்வீட் பதிவிட்டுள்ளார்.



நீலகிரி மாவட்டத்தில் உள்ள சுற்றுலா தளங்களுக்கு தென்காசி மாவட்டம் கடையத்தில் இருந்து 59 பயணிகளுடன் பேருந்து ஒன்று வந்துள்ளது. ஊட்டியை சுற்றி பார்த்துவிட்டு இன்று 30.09.2023 மாலை பேருந்தில் சுற்றுலா பயணிகள் சொந்த ஊர் திரும்பியுள்ளனர். அப்போது குன்னூர் மேட்டுப்பாளையம் மரப்பாலம் அருகே வளைவில் திரும்பும் போது பேருந்து ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்துள்ளது.

இதனால் பஸ் கண்ணிமைக்கும் நேரத்தில் தடுப்புச்சுவரில் மோதி பள்ளத்தில் கவிழ்ந்தது. சுமார் 50 அடி பள்ளத்தில் பஸ் தலைக்குப்புற கவிழ்ந்தது. இந்த பயங்கர விபத்தில் 8 பேர் பலியாகினர். மேலும் பஸ்சில் சிக்கி தவித்தவர்களை போலீசார் மற்றும் தீயணைப்பு படை வீரர்கள் மீட்டனர். தொடர்ந்து மீட்பு பணி நடந்து வருகிறது. சுற்றுலா சென்று விட்டு திரும்பிய போது நடந்த விபத்தில் 8 பேர் உயிரிழந்தது பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில், விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பங்களை இரங்கல் தெரிவித்து தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை ட்விட் பதிவிட்டுள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள பதிவில், "குன்னூர் அருகே, 50 அடி பள்ளத்தில் சுற்றுலாப் பேருந்து கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் 8 பேர் உயிரிழந்துள்ளனர் என்ற செய்தியறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன். அவர்கள் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காயமடைந்து, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் அனைவரும் விரைவில் குணமடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன். அவர்களுக்கு உயர்தர சிகிச்சை வழங்க தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அண்ணாமலை ட்விட் வெளியிட்டுள்ளார். விபத்து நடந்த இடத்தில் தொடர்ந்து மீட்பு பணிகள் நடந்து வருகிறது. ஆம்புலன்ஸ்கள் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

# வந்தே பாரத்துக்காக மதுரை செல்லும் எக்ஸ்பிரஸ் ரயில்களின் வேகம் குறைப்பு: பயணிகள் பரபரப்பு புகார்!

சென்னை,அக்.1

வந்தே பாரத் ரயில்களுக்காக எக்ஸ்பிரஸ் ரயில்களின் வேகத்தை குறைக்க சொன்னதால் பயணிகள் பலர் வேதனையில் தங்கள் குமுறலை வெளிப்படுத்தி வருகிறார்கள். வந்தே பாரத் எனும் உள்நாட்டிலேயே சென்னை ஐசிஎஃப் பேக்டரியில் தயார் செய்யப்பட்ட வந்தே பாரத் ரயில்கள் தற்போது இந்தியாவில் 34 வழித்தடங்களில் இயக்கப்பட்டு வருகிறது.இந்த நிலையில் அண்மையில் சென்னை நெல்லை இடையே வந்தே பாரத் ரயிலானது நீண்ட எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் இயக்கப்பட்டது. இந்த ரயிலில் டிக்கெட் கட்டணம் ஏசி சேர் காரில் உணவுக்கு 364 ரூபாய் உட்பட 1,665 ரூபாய் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. சிறப்பு பெட்டியில் உணவுக்கு 419 ரூபாய் உட்பட 3,055 ரூபாய் கட்டணமாக வசூல் செய்யப்படுகிறது. ஒரு வேளை உணவு வேண்டாமென்றால் No food என்ற option



ஐ தேர்வு செய்ய வேண்டும். வைகை உள்ளிட்ட எக்ஸ்பிரஸ் ரயிலை ஒப்பிடுகையில் வந்தே பாரத் ரயில் கட்டணம் பன்மடங்கு உள்ளது. இதனால் ஏழை எளிய நடுத்தர மக்கள் வந்தே பாரத் ரயிலை பயன்படுத்துவார்களா என்ற சந்தேகம் இருக்கிறது. இந்த ரயிலில் கட்டணம் அதிகமாக இருந்தாலும்பயணநேரம்குறைவு என்பதால் பலர் இதில் பயணிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் வந்தே பாரத் ரயிலின் பயன்பாட்டை அதிகரிக்கும் நோக்கில் மற்ற எக்ஸ்பிரஸ் ரயில்களின் வேகத்தை குறைக்கும் முயற்சி நடைபெறுவதாக பயணிகள் குற்றம்சாட்டுகிறார்கள்.

சென்னை நெல்லை வந்தே பாரத் ரயிலில் பயணிகள் அதிகளவில் வர வேண்டும் என்பதற்காக மற்ற எக்ஸ்பிரஸ் ரயில்களான வைகை, பாண்டியன், பொதிகை, கன்னியாகுமரி, முத்துநகர், நெல்லை உள்ளிட்ட ரயில்களின் வேகத்தை குறைப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அதுபோல் எக்ஸ்பிரஸ் ரயில்களின் நேரமும் மாற்றியமைக்கப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. நாளை முதல் மதுரைசெல்லும்வைகை எக்ஸ்பிரஸ் ரயில் அரை மணி நேரம் முன்னதாகவே சென்னையிலிருந்து புறப்படும் என சொல்லப்பட்டுள்ளது. இதுகுறித்து பயணிகள் கூறுகையில் வந்தே பாரத் ரயிலில் அவ்வளவு கட்டணம் கொடுத்து ஏழை மக்களால் செல்ல முடியாது. பேருந்தில் கூடஎங்களால்கட்டணம் செலுத்த முடியாது என்பதால்தான் ரயிலில் குறைந்த கட்டணத்தில் ஊர்களுக்கு செல்கிறோம். தற்போது வந்தே பாரத்துக்காக இந்த எக்ஸ்பிரஸ் ரயில்களின் வேகத்தை குறைப்பது என்ன நியாயம் என்கிறார்கள். ஆகஸ்ட் 15 ஆம் தேதிதான் வைகை எக்ஸ்பிரஸ் தனது 46 ஆவது பிறந்த நாளை கொண்டாடியது குறிப்பிடத்தக்கது.

# பத்திரப்பதிவு முதல் பழனி முருகன் கோயில் வரை.. அமலாகும் புதிய சட்டங்கள்!

சென்னை,அக்.1

அமலுக்கு வரும் திட்டங்கள் என்னென்ன என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.

அக்டோபர் 7ஆம் தேதி முதல் ரூ 2 ஆயிரம் நோட்டுகள் செல்லாது நிலம் வாங்கி பத்திரப்பதிவு செய்யும் போது சொத்துக்களின் புகைப்படமும் இடம் பெறுவது கட்டாயம் வெளிநாடு செல்பவர்கள் ரூ 7 லட்சத்திற்கு மேல் கிரெடிட் கார்டு மூலம் வெளிநாட்டில் செலவு செய்தால் 20 சதவீதம் வரி. வெளிநாட்டு கல்விக்காக ரூ 7 லட்சத்திற்கு மேல் கடன் பெற்றால் 0.5 சவீதம் டிசிஎஸ் கட்டணம் மியூச்சுவல்ஃபண்ட் கணக்குகளில் வாடிக்கையாளர்கள் நாமினியை சேர்க்க வேண்டும்.

இல்லாவிட்டால் கணக்குகள் முடக்கப்படும். டிமேட் மற்றும் டிரேடிங் கணக்குகளிலும் நாமினி கட்டாயம். பொது வருங்கால வைப்பு நிதி, சுகன்யா சம்ரிதி யோஜனா, தபால் நிலைய வைப்பு தொகை, சிறு சேமிப்பு திட்டங்களுக்கு ஆதார் எண் கட்டாயம் இணைக்க வேண்டும். பழனி முருகன் கோயிலுக்கு செல்போன் கொண்டு செல்ல தடை அரசு வேலைவாய்ப்புகளுக்கு பிறப்பு சான்றிதழ் அவசியம். மக்கள் தொகை, வாக்காளர் பதிவு, ஆதார்எண், ரேஷன் கார்டு, டிரைவிங் லைசன்ஸ், சொத்துப்பதிவு, கல்வி நிறுவன சேர்க்கை, திருமண பதிவு ஆகியவற்றிற்கு ஒரே ஆவணமாக பிறப்ப சான்றிதழை பயன்படுத்தலாம். பிறப்பு, இறப்புகளை கட்டாயம் பதிவு செய்வது அவசியம் அக்டோபர் 1 முதல் குடிநீர் வரி ரொக்கமாக ஏற்கப்படாது; சென்னை குடிநீர் வாரியம் இன்று முதல் ஆன்லைன் கேமிங்கிற்கு 28 சதவீதம் ஜிஎஸ்டி மணிப்பூரில் இன்று முதல் ஆயுதப் படை சிறப்பு சட்டம் அமல் இன்று முதல் 182 ரயில்கள் நேரம் மாற்றம் சிமெண்ட் விலை இன்று முதல் உயர்வு


Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023

# பிருத்விராஜ் மோகன்லாலின் 'எம்புரான்' படப்பிடிப்பு அக்.5ல் தொடக்கம் அறிமுக வீடியோ

பிருத்விராஜ் இயக்கத்தில் மோகன்லால் நடிக்கும் 'எம்புரான்' படத்தின் படப்பிடிப்பு அக்டோபர் 5ம் தேதி தொடங்கும் என படக்குழு அறிவித்துள்ளது. மேலும், இது தொடர்பான அறிவிப்பு வீடியோவும் வெளியிடப்பட்டுள்ளது. நடிகர் பிருத்விராஜ் இயக்கத்தில் மோகன்லால் நடிப்பில் கடந்த 2019ஆம் ஆண்டு வெளியான படம் 'லூசிஃபர்'. மலையாளத்தைக் கடந்து மற்ற மொழி ரசிகர்களால் கொண்டாடப்பட்ட இப்படம் தெலுங்கில் 'காட்ஃபாதர்' என்ற பெயரில் ரீமேக்கானது. சிரஞ்சீவி, நயன்தாரா நடித்த இப்படத்தை மோகன்ராஜா இயக்கினார். 'லூசிஃபர்' படத்தின் வெற்றியைத் தொடர்ந்து இதன் இரண்டாம் பாகம் வெளியாகும் என பிருத்விராஜ் அறிவித்திருந்தார்.




அதன்படி இரண்டாம் பாகத்துக்கு 'எம்புரான்' என தலைப்பிடப்பட்டுள்ளது. ஆண்டனி பெரும்பாவூருடன் இணைந்து லைகா நிறுவனம் தயாரிக்கும் இப்படத்துக்கு முரளி கோபி கதை எழுதியுள்ளார். பிருத்விராஜ் இப்படத்தை இயக்குவதோடு மட்டுமல்லாமல் முக்கியக் கதாபாத்திரத்திலும் நடிக்கவுள்ளார். முழுக்க முழுக்க பொழுதுபோக்கு சினிமாவாக அதிக பட்ஜெட்டில் உருவாகும் இப்படம் பான் இந்தியா முறையில் வெளியாக உள்ளது. இந்நிலையில், இப்படத்தின் 0படப்பிடிப்பு வரும் அக்டோபர் 5ம் தேதி முதல் தொடங்கும் என படக்குழு அறிவித்துள்ளது. மேலும் 'லூசிஃபர்' படத்தின்ட்ரெய்லரைரீஎடிட் செய்து அதனையே அறிவிப்பு வீடியோவாக்கி வெளியிட்டுள்ளனர்



# சக்திமானாக நடிக்கிறாரா ரன்வீர்? டொவினோ தாமஸ் கூறியது என்ன?

'மின்னல் முரளி' இயக்குநர் பேசில் ஜோசப் இயக்கத்தில் ரன்வீர் சிங் நடிக்க இருப்பதை நடிகர் டொவினோ தாமஸ் உறுதி செய்துள்ளார். கடந்த 1997ம் ஆண்டு தூர்தர்ஷன் சேனலில் ஒளிபரப்பான தொடர் 'சக்திமான்'. அப்போதைய சிறுவர்களிடையே மிகவும் பிரபலமடைந்த இந்தத் தொடர் கிட்டத்தட்ட 2005ம் ஆண்டு வரை ஒளிபரப்பப்பட்டடது. இதில் சக்திமானாக முகேஷ் கண்ணா நடித்திருந்தார். இந்தத் தொடரை சூப்பர்ஹீரோ திரைப்படமாக உருவாக்க இருப்பதாக சோனி நிறுவனம் சில ஆண்டுகளுக்கு முன்பு அறிவித்தது. ஒரு பேட்டியில் இது குறித்து பேசிய முகேஷ் கண்ணா பாலிவுட்டின் முன்னணி நடிகர் ஒருவர் சக்திமானாக நடிக்க இருப்பதாக கூறியிருந்தார்.

இந்த நிலையில், மலையாள நடிகர் டொவினோ தாமஸ் அண்மையில் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் லைவ் மூலம் ரசிகர்களிடம் உரையாடினார். அப்போது பாலிவுட் நடிகர் ரன்வீர் சிங் அதில் 'லவ் ஃப்ரம் மும்பை' என்று கமெண்ட் செய்திருந்தார். ரன்வீருக்கு பதிலளித்த டொவினோ, 'மின்னல் முரளி' இயக்குநர் பேசில் ஜோசப் இயக்கத்தில் ரன்வீர் சிங் நடிக்க இருப்பதை உறுதி செய்தார். ஆனால் அது என்ன படம் என்பது குறித்து அவர் எதுவும் தெரிவிக்கவில்லை. இதனைத் தொடர்ந்து 'சக்திமான்' படத்தை பேசில் ஜோசப் இயக்க அதில் ரன்வீர் நடிக்க இருக்கிறார் என்ற தகவல் சமூக வலைதளங்களில் பரவத் தொடங்கிவிட்டது. மின்னல் முரளி: பேசில் ஜோசப் இயக்கத்தில் டொவினோ தாமஸ், குரு சோமசுந்தரம் நடித்த படம் 'மின்னல் முரளி'. சூப்பர் ஹீரோ கதைக்களத்தைக் கொண்ட இப்படம் கடந்த 2021ல் நெட்ஃப்ளிக்ஸில் வெளியாகி பெரும் வரவேற்பைப் பெற்றது. உலகம் முழுவதும் 30க்கும் மேற்பட்ட நாடுகளில் 'மின்னல் முரளி' நெட்ஃப்ளிக்ஸ் ட்ரெண்டிங்கில் இடம்பிடித்தது குறிப்பிடத்தக்கது.

# 'லியோ' உடன் மோத தயாராகும் பாலையாவின் 'பகவந்த் கேசரி'

ஹைதராபாத்: அனில் ரவிபுடி இயக்கத்தில் பாலகிருஷ்ணா நடித்துள்ள 'பகவந்த் கேசரி' திரைப்படம் வரும் அக்.19ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகிறது.

பாலகிருஷ்ணாவின் 108வது படமாக உருவாகியுள்ள படம் 'பகவந்த் கேசரி' இப்படத்தை அனில் ரவிபுடி இயக்குகிறார். காஜல் அகர்வால்,



ஸ்ரீலீலா ஆகியோர் முன்னணி கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். ஷைன்ஸ் ஸ்கீரின் நிறுவனம் இப்படத்தை தயாரிக்கிறது. தமன் இசையமைத்துள்ள இந்தப் படம் ஆக்ஷன் என்டர்டெயினராக உருவாக உள்ளது.

இந்த நிலையில் கடந்த 8 மாதங்களாக நடைபெற்று வந்த இப்படத்தின் படப்பிடிப்பு தற்போது நிறைவடைந்துள்ளது. இதனை படத்தின் இயக்குநர் அனில் ரவிபுடி தனது எக்ஸ் பக்கத்தில் தெரிவித்துள்ளார். அத்துடன் படப்பிடிப்பின் போது எடுக்கப்பட்ட வீடியோ ஒன்றையும் பகிர்ந்துள்ளார். மேலும் 'பகவந்த் கேசரி' திரைப்படம் வரும் அக்டோபர் 19ஆம் தேதி திரையங்குகளில் வெளியாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதே தேதியில் விஜய் நடித்துள்ள 'லியோ' படமும் வெளியாகிறது. லோகேஷ் கனகராஜ் இயக்கியுள்ள இப்படத்துக்கு பெரும் எதிர்பார்ப்பு நிலவி வருகிறது. இப்படத்தில் விஜய்யுடன் த்ரிஷா, அர்ஜுன், சஞ்சய் தத், கவுதம் மேனன் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். அனிருத் இசையமைத்துள்ளார்.

# திரைப்பட புரொமோஷன்களில் நயன்தாரா கலந்துகொள்ளாதது ஏன்? விக்னேஷ் சிவன் பதில்



அவர் பெரும்பாலும் தனது சொந்தப் படங்களுக்கான புரொமோஷன்களில் கூட கலந்துகொள்ள முன்வருவதில்லை. சிறந்த ஒன்று தன்னைத்தானே விளம்பரப்படுத்திக் கொள்ளும் என அவர் நம்புகிறார்" என்று நயன்தாரா குறித்து விக்னேஷ் சிவன் பேசியுள்ளார்.

திரைப் பிரபலங்களான நயன்தாராவும், விக்னேஷ் சிவனும் இணைந்து ' 9skin' என்ற அழகு சாதனப் பொருட்கள் விற்கும் நிறுவனம் மூலம் தொழில்முனைவோர் ஆகியுள்ளனர். இதற்கான அறிமுக விழா மலேசியாவில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அவர்கள் தங்களது பிராண்டை அறிமுகம் செய்தனர். தொடர்ந்து மேடையில் பேசிய இயக்குநர் விக்னேஷ் சிவன், "நயன்தாராவை பொறுத்தவரை ஒரு விஷயம் சரியானது என தோன்றினால் மட்டுமே அதனை செய்ய முடிவெடுப்பார். அத்துடன் அதனை புரொமோட் செய்வார். அவர் பெரும்பாலும் தனது சொந்த படங்களுக்கான புரொமோஷன்களில் கூட கலந்துகொள்ள முன்வருவதில்லை. சிறந்த ஒன்று தன்னைத்தானே விளம்பரப்படுத்திக் கொள்ளும் என அவர் நம்புகிறார்.

இப்போது நாங்கள் விற்கும் இந்தப் பொருட்கள் கூட அவர் பயன்படுத்தி பார்த்தவைதான். தொடக்கத்தில் இந்த அழகு சாதனப் பொருட்களுக்கு அவர் ஒரு பிராண்ட் அம்பாசிடராக இருப்பார் என நினைத்தேன். ஆனால், அவர் இதில் முழுமையாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இதற்கான வடிவமைப்பு, எழுத்துரு முதற்கொண்டு அனைத்தையும் அவரே முழுமையாக கவனித்துக்கொண்டார். அது எனக்கு மிகவும் உத்வேகம் அளித்தது. சின்னச் சின்ன விஷயங்களில் கூட அவர் அக்கறையையும், அர்ப்பணிப்பையும் கண்டு நான் வியந்திருக்கிறேன்" என்று விக்னேஷ் சிவன் பேசினார்.

# "ஆண் நடிகர்களுக்கு பாராட்டு... பெண்ணுக்கு விமர்சனமா?" எமி ஜாக்சன் ஆதங்கம்



தனது புதிய தோற்றம் குறித்து விமர்சனம் செய்பவர்களுக்கு நடிகை எமி ஜாக்சன் பதிலடி கொடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அளித்த பேட்டி ஒன்றில், "நான் ஒரு நடிகை. என்னுடைய பணியை தீவிரமாக செய்கிறேன். கடந்த மாதம் என்னுடைய புதிய படத்துக்கான படப்பிடிப்பு லண்டனில் நடைபெற்றது. அந்தப் படத்துக்காக என்னுடைய உடல் எடையை குறைத்து முழுவதுமாக அந்தக் கதாபாத்திரத்தில் என்னை ஈடுபடுத்திக் கொள்கிறேன். இதில் எழும் ஆன்லைன் கூக்குரல்கள் (குறிப்பாக ஆண்கள்) மிகவும் வருத்தமடையச் செய்கிறது.

என்னுடன் பணியாற்றும் ஆண் நடிகர்கள் படத்துக்காக தங்களது தோற்றங்களை எப்படியெல்லாமோ மாற்றிக்கொள்கிறார்கள், அதற்காக அவர்கள் பாராட்டும் பெறுகிறார்கள். இதுவே ஒரு பெண் அவர்களின் அழகுக்கான வரையைறை மீறி வழக்கத்துக்கு மாறான முடியுடன் கூடிய தோற்றத்தை மாற்றிக்கொண்டால், அவரை விமர்சிப்பதற்கு எல்லா உரிமையும் உண்டு என நினைக்கிறார்கள்" என ஆதங்கம் தெரிவித்துள்ளார். முன்னதாக, தனது தோற்றத்தை ஹாலிவுட் நடிகர் சிலியன் மர்பியுடன் சிலர் ஒப்பீடுவது மகிழ்ச்சியளிக்கிறது எனவும் தெரிவித்துள்ளார்.

# 1975டு2019 உலகக் கோப்பை ஃபைனலில் ஆட்ட நாயகன் விருதை வென்ற வீரர்கள்!



அடுத்த சில நாட்களில் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் தொடங்க உள்ளது. இந்தச் சூழலில் 1975 முதல் 2019 வரையிலான உலகக் கோப்பை தொடரின் இறுதிப் போட்டியில் ஆட்ட நாயகன் விருதை வென்ற வீரர்கள் குறித்து பார்ப்போம்.

'உலகக் கோப்பை கிரிக்கெட்2023' தொடர் வரும் அக்டோபர் 5ம் தேதி முதல் நவம்பர் 19ம் தேதி வரை இந்தியாவில் உள்ள 10 நகரங்களில் நடைபெறவுள்ளது. தொடரை இந்தியா நடத்துகிறது.

மொத்தம் 48 போட்டிகள். தொடரில் இந்தியா, நடப்பு சாம்பியன் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், இலங்கை, தென் ஆப்பிரிக்கா, நியூஸிலாந்து, வங்கதேசம், ஆப்கானிஸ்தான், நெதர்லாந்து ஆகிய 10 நாடுகள் பங்கேற்கின்றன. தற்போது 10 அணிகளும் பயிற்சி ஆட்டங்களில் விளையாடுகின்றன. இதுவரையில் நடைபெற்ற உலகக் கோப்பை தொடர்களின் இறுதிப் போட்டியில் ஆட்ட நாயகன்கள்

1975 கிளைவ் லாயிட்
1979 விவியன் ரிச்சர்ட்ஸ்
1983 மொகிந்தர் அமர்நாத்
1987 டேவிட் பூன்
1992 வாசிம் அக்ரம்
1996 அரவிந்தா டி சில்வா
1999 ஷேன் வார்ன்
2003 ரிக்கி பாண்டிங்
2007 ஆடம் கில்கிறிஸ்ட்
2011 மகேந்திர சிங் தோனி
2015 ஜேம்ஸ் ஃபால்க்னர்
2019 பென் ஸ்டோக்ஸ்



# அஸ்வினின் 'டூப்'பை அழைத்த ஆஸி.; வாய்ப்பை நிராகரித்த ஆஃப் ஸ்பின்னர்!

உலகக் கோப்பை தொடருக்கான இந்திய அணியில் கடைசி நேரத்தில் ஆஃப் ஸ்பின்னர் அஸ்வின் இடம்பெற்றார். இந்தச் சூழலில் அஸ்வினை சமாளிக்க அவரைப் போலவே பந்து வீசும் மகேஷ் பித்தியாவை நெட் பவுலராக அழைத்துள்ளது ஆஸ்திரேலிய அணி நிர்வாகம். ஆனால், அவரோ அதனை மறுத்துள்ளார். இந்தியா மற்றும் ஆஸ்திரேலிய அணிகள், அக்டோபர் 8ம் தேதி அன்று சென்னை சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானத்தில் உலகக் கோப்பை தொடரின் முதல் லீக் போட்டியில் விளையாடுகின்றன. அஸ்வின், சென்னையை சேர்ந்தவர். ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக அபாரமாக பந்து வீசும் திறன் படைத்தவர். அதனால் அவர் ஆடும் லெவனில் இடம் பிடிக்கவும் வாய்ப்பு உள்ளது. இந்தச் சூழலில் பயிற்சி ஆட்டத்துக்காக திருவனந்தபுரத்தில் முகாமிட்டுள்ள ஆஸ்திரேலிய அணி, மகேஷ் பித்தியாவை நெட் பவுலராக அழைத்துள்ளது. இவர் ஏற்கெனவே கடந்த பிப்ரவரியில் இந்தியாவுக்கு டெஸ்ட் கிரிக்கெட் விளையாட சுற்றுப்பயணமாக வந்திருந்த ஆஸ்திரேலிய அணிக்கு நெட் பவுலராக உதவியிருந்தார். அஸ்வினை நகல் எடுத்தது போல பந்து வீசும் திறன் படைத்த வீரர். அதனால் அவரை எதிர்கொண்டால் அது உலகக் கோப்பை தொடருக்கு நல்லதொரு பயிற்சியாக அமையும் என்பது ஆஸி.யின் கணக்கு. முக்கியமாக வார்னர், லபுஷேன், ஸ்மித் போன்ற வீரர்கள் அஸ்வின் பந்துவீச்சை சமாளிக்க தடுமாறுவார்கள். அண்மையில் முடிந்த இந்தியா ஆஸ்திரேலியா தொடர் இதற்கு உதாரணம். உலகக் கோப்பை அணியில் அஸ்வின் இல்லாதபோதே மகேஷ் பித்தியாவுக்கு தயாராக இருக்குமாறு ஆஸி. தரப்பில் தகவல் கொடுக்கப்பட்டுள்ளது. அஸ்வின், இந்திய அணியில் இடம் பிடித்ததும் மகேஷ் பித்தியாவை ஆஸி. அழைத்துள்ளது. ஆனால், அவர் உள்ளூர் கிரிக்கெட் சீசனில் பரோடா அணிக்காக விளையாடும் நோக்கில் அந்த வாய்ப்பை நிராகரித்துள்ளார். "சர்வதேச அணியுடன் பணியாற்றுவது நல்லதொரு அனுபவம் தான். அஸ்வின், இந்திய அணியில் அறிவிக்கப்பட்டதும் எனக்கு அழைப்பு வந்தது. ஆனால், எதிர்வரும் உள்ளூர் கிரிக்கெட் தொடர்களில் எனது கவனம் இருப்பதால் மறுத்துவிட்டேன். பரோடா அணிக்காக விளையாடுவது தான் எனது விருப்பம்" என மகேஷ் பித்தியா தெரிவித்துள்ளார்.




# ODI WC 2023 வாகை சூடும் வேட்கையில் இந்திய அணி!

ஒரு நபர் தனது வெற்றி அல்லது தோல்விகளால் ஒரே இரவில் மாற முடியாது. ஒரு ஆட்டத்தின் முடிவு அல்லது ஒரு சாம்பியன்ஷிப் ஒரு நபராக என்னை மாற்றும் என்று நான் நினைக்கவில்லை. கடந்த 16 ஆண்டுகளில் நான் ஒரு நபராக மாறவில்லை.

எதுவும் மாற வேண்டும் என்று நான் நினைக்கவில்லை" என இந்திய அணியின் கேப்டன் ரோஹித் சர்மா தெரிவித்துள்ளார்.

'உலகக் கோப்பை கிரிக்கெட்2023' தொடர் வரும் அக்டோபர் 5ம் தேதி முதல் நவம்பர் 19ம் தேதி வரை இந்தியாவில் உள்ள 10 நகரங்களில் நடைபெறவுள்ளது. தொடரை இந்தியா நடத்துகிறது.

மொத்தம் 48 போட்டிகள். தொடரில் இந்தியா, நடப்பு சாம்பியன் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், இலங்கை, தென் ஆப்பிரிக்கா, நியூஸிலாந்து, வங்கதேசம், ஆப்கானிஸ்தான், நெதர்லாந்து ஆகிய 10 நாடுகள் பங்கேற்கின்றன. தற்போது 10 அணிகளும் பயிற்சி ஆட்டங்களில் விளையாடுகின்றன.



Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.